
விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆவணி - 18 வெள்ளி 03.09.2021 மலர் - 2, இதழ் - 150

# பதக்கம் பெற உதவிய பகவத் கீதை

டோக்கியோவி நடைபெறும் பாராலிம்பிக் போட்டியில் உயரம் தாண்டுதலில் வெண்கலப் பதக்கம் வென்றவர் சரத்குமார். இது குறித்து அவர் கூறுகையில், ‘பாராலிம்பிக்ஸ் டி 42 உயரம் தாண்டுதலில் பங்கேற்பதற்கு முந்தைய நாள் இரவு எனக்கு ஏற்பட்ட முழங்கால் பிரச்சனையால் மனச்சோர்வடைந்து இருந்தேன். உலகின் மிகப்பெரிய விளையாட்டு நிகழ்வில் இருந்து வெளியேறும் எண்ணமும் வந்தது. என் நிலையை நினைத்து அழுதேன். பிறகு என் குடும்பத்தினருடன் தொலைபேசியில் பேசினேன். அப்போது என் தந்தை, ‘பகவத் கீதையைப் படி, உன் கட்டுப்பாட்டில் உள்ளவற்றின் மீது மட்டும் கவனம் செலுத்து, உன்னால் கட்டுப்படுத்த முடியாதவற்றை மறந்துவிடு’ என்று கூறினார். மறுநாள் போட்டியின்போது நல்ல மழை, நடுவர்கள் போட்டியை தள்ளிவைக்க ஒப்புக்கொள்ளவில்லை. இந்த கடின சூழலில், உயரம் தாண்டுதல், எனது முழங்கால்களைப் பாதுகாத்தல் என இரண்டு வேலைகளை நான் செய்ய வேண்டி இருந்தது. எனினும் அப்போட்டியில் நான் பதக்கம் வென்றதற்கு என் குடும்பத்தினர் ஆதரவும் பகவத் கீதையுமே காரணம் என அவர் தெரிவித்தார்.




விஜயபாரதம்

# இறைவனிடம் முறையீடு

இந்து முன்னணி சார்பில், விநாயகர் சதுர்த்தி விழா தடையை நீக்கவும் தமிழகத்தை ஆளும் தி.மு.க அரசுக்கு நல்ல புத்தியை கொடுக்கவும் வேண்டி தமிழகமெங்கும் உள்ள கோயில்களில் இறைவனிடம் முறையீடு செய்யப்பட்டது. பல்லாயிரக்கணக்கானோர் இதில் கலந்துகொண்டனர்.

விஜயபாரதம்






# சங்க நூல்களுக்கும் தி.மு.க. ஸ்டிக்கர்

சங்கத் தமிழ் இலக்கியங்களை சந்தி பிரித்து, எளிய தொகுப்பாக வெளியிடப்படும். அதற்கு 'திராவிடக் களஞ்சியம்' என்று பெயர் சூட்டப்படும் என அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்துள்ளார். இதற்கு பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும், தமிழறிஞர்களும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். 'சங்கத் தமிழ் நூல்கள் எதிலும் 'திராவிட' என்ற சொல் கிடையாது. தமிழ், தமிழகம் என்ற சொற்களே உள்ளன. வரலாற்று உண்மையை திரித்து சங்கத் தமிழ் நூல்களுக்கு 'திராவிடக் களஞ்சியம்' என்று சூட்டுவதில் உள்நோக்கம் இருக்க வேண்டும். முதல்வர் ஸ்டாலின் அண்மைக் காலமாக தமிழ், தமிழர் போன்ற இயற்கையான சொற்களுக்கு மாற்றாக 'திராவிட' என்ற சொல்லைப் புகுத்துகிறார். தமிழக வளர்ச்சியைக்கூட அவர் 'திராவிட மாடல்' என்று பெயர் சூட்டினார். முதல்வராக பதவியேற்றவுடன் 'நான் திராவிட இனத்தைச் சேர்ந்தவன்' என்று அறிவித்துக் கொண்டார். தமிழர்களிடம் வாக்கு வாங்கும்வரை அவர்களின் அசல் இனப்பெயரைச் சொல்வது, வெற்றி பெற்ற பின்பு திராவிடத்தைத் திணிப்பது என்ற தந்திரம்தான் இது' என பல தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். ஆட்டை கடித்து மாட்டைக் கடித்து மனிதனைக் கடித்த கதையாக, மத்திய அரசு திட்டங்கள், முந்தைய அ.தி.மு.க திட்டங்களுக்கு தனது ஸ்டிக்கரை ஒட்டி விளம்பரம் தேடிவந்த தி.மு.க அரசு, தற்போது தனது ஸ்டிக்கர் ஒட்டும் பணியை சங்க நூல்களிலும் புகுத்தியுள்ளதாக இணையதளவாசிகள் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

விஜயபாரதம்




# பத்ம விருதுக்கு பரிந்துரைப்போம்

நமது தேசத்தில் பல்வேறு துறைகளில் சேவை மற்றும் சாதனை புரிந்தோருக்கு, மத்திய அரசின் சார்பில் ஆண்டு தோறும் பத்ம விருதுகள் வழங்கப்படுகின்றன. பத்ம விபூஷண், பத்ம பூஷண், பத்ம ஸ்ரீ உள்ளிட்ட நாட்டின் மிக உயரிய இந்த 'பத்ம' விருதுகள் பெறு தகுதி உடையோரின் பெயர்களை பொதுமக்கள் பரிந்துரைக்க வேண்டும். அதனை நேரடியாக மத்திய உள்துறை அமைச்சகத்தின், https://padmaawards.gov.in என்ற வலைதளத்தில் வரும் 15ம் தேதிக்குள் பரிந்துரைக்கலாம் என மத்திய உள்துறை அமைச்சகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. விருது பெறுவோர் குறித்த விபரங்கள், அடுத்த ஆண்டு குடியரசு தினத்தை முன்னிட்டு அறிவிக்கப்படும்.

விஜயபாரதம்






# மதவெறி போதகர் கைது

கோவையில், விநாயகர் சதுர்த்தி ஊர்வலங்கள், விக்கிரக வழிபாடு உள்ளிட்டவை நடைபெறக்கூடாது என கடந்த 3 ஆண்டுகளாக விநாயகர் சதுர்த்தி காலகட்டத்தில் கிறிஸ்தவ ஜெப யாத்திரை நடைபெற்று வருகிறது. இதனை இந்த ஆண்டும் நடத்த வேண்டும் என கோவையிலுள்ள கிறிஸ்துவர்களுக்கு கோவை, செயின்ட் பால் கல்லூரி சார்பில், அதன் தலைவர் டேவிட் கடிதம் அனுப்பி உள்ளார். அக்கடிதம் பிட் நோட்டீஸ்களாகவும் விநியோகிக்கப்பட்டு உள்ளன. இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், சமூக நல்லிணக்கத்தை சீர்குலைப்பது, மத மோதலுக்கு வழிவகுப்பது, ஒரு மதத்திற்கு எதிராக செயல்படுவது, ஹிந்துக்களின் மனங்களை புண்படுத்துவது என செயல்பட்ட மதபோதகர் டேவிட் மீது வழக்குப்பதிவு செய்து கைது செய்ய வேண்டும் என ஹிந்து முன்னணி கோரிக்கை விடுத்தது. அவரை கைது செய்யாவிட்டால் 5 ஆயிரம் பேர் திரண்டு சாலை மறியலில் ஈடுபடுவோம் எனவும் தெரிவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து விஷம பிரசாரம் செய்த குற்றத்தின் கீழ் கிறிஸ்தவ மதபோதகர் டேவிட் நேற்று கைது செய்யப்பட்டார். ஏற்கனவே, கொரோனாவை காரணம் காட்டி இந்த ஆண்டு பொது இடங்களில் விநாயகர் சிலைகளை வைத்து வழிபட தடை விதித்து தமிழக அரசு ஹிந்துக்களை வஞ்சித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# அறிக்கை கோரும் பிரதமர்

அரசின் உட்கட்டமைப்புத் திட்டங்கள் அனைத்தும் சரியான நேரத்தில் நிறைவேறுவது மிகவும் அவசியம். இல்லையெனில் அது, மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்கள், செலவின உயர்வுகள், வருமான இழப்பு, தேசத்தின் வளர்ச்சி பாதிப்பு போன்ற பல்வேறு பிரச்சனைகளுக்கு அடிகோலும். மத்திய அரசின் 504 உட்கட்டமைப்புத் திட்டங்கள், முடிக்கப்பட வேண்டிய கால அட்டவணையையும் தாண்டி தொடர்கின்றன. 483 உட்கட்டமைப்பு திட்டங்களில் காலதாமதம், நீதிமன்ற வழக்குகள் போன்ற பல்வேறு காரணங்களால் திட்டசெலவுகள் அதிகமாகியுள்ளன என்ற புள்ளிவிவரத்தை எகனாமிக் டைம்ஸ் வெளியிட்டுள்ளது. இந்நிலையில், நீதிமன்ற உத்தரவுகள், பசுமை தீர்ப்பாய உத்தரவுகள் உள்ளிட்ட காரணங்களால் தாமதப்படும் அரசின் உட்கட்டமைப்புத் திட்டங்கள், அதன் காரணங்கள், திட்ட மதிப்பு, தாமதத்தால் உயர்ந்துவிட்ட செலவினங்கள், இதனால் வரி செலுத்துவோருக்கு ஏற்படும் இழப்புகள் குறித்த விரிவாக பட்டியலை சமர்ப்பிக்க அனைத்துத் துறை அமைச்சகங்களையும் பிரதமர் மோடி கோரியுள்ளார்.



விஜயபாரதம்

# சிறப்பாக செயல்பட்ட பாரதம்



விஜயபாரதம்

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் ஐ.நா., பாதுகாப்பு கௌன்சிலுக்கு சுழற்சி முறையில் பாரதம் தலைமை ஏற்றது. இந்த ஒரு மாதத்தில் பாரதத்தின் தலைமையில் ஐ.நா பாதுகாப்பு கௌன்சில் மிக சிறப்பாக செயல்பட்டது, பல முன்மாதிரிகளை உருவாக்கியுள்ளது, முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன என அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், பிரேசில் உள்ளிட்ட நாடுகள் பாராட்டுத் தெரிவித்துள்ளன. பாரதப் பிரதமர் ஒருவர், ஐ.நா பாதுகாப்பு கௌன்சில் கூட்டத்திற்கு தலைமை ஏற்றது இதுவே முதன் முறை. பிரதமர் மோடி தலைமையில், கடல்சார் பாதுகாப்பு குறித்த கூட்டம் நடைபெற்றது. இதுவரை எந்த ஐ.நா சபை கூட்டத்திலும் பங்கேற்காத ரஷ்ய அதிபர் புதின் இந்த கூட்டத்தில் பங்கேற்றார். ஐ.நா அமைதிப் படையினர் செய்யும் குற்றங்களுக்கு அவர்களை பொறுப்பாக்கும் முக்கிய வரைவு தீர்மானத்தை, பாரதம் தாக்கல் செய்தது. இதுவரை இல்லாத வகையில் இதனை 80 உறுப்பு நாடுகள் வழிமொழிந்தன. 15 உறுப்பு நாடுகளும் ஒருமித்த ஆதரவு தெரிவித்தன. ஆப்கன் தொடர்பாக, ஒரே மாதத்தில் மூன்று முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.


# பல்கலைக்கழக தரவரிசை பட்டியல்



விஜயபாரதம்

டைம்ஸ் உலக பல்கலைக்கழக தரவரிசை பட்டியல் வெளியிடப்பட்டது. அதில் பாரதத்தை சேர்ந்த 71 பல்கலைக்கழகங்கள் இடம் பெற்றுள்ளன. இப்பட்டியலில், இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் சயின்ஸ் (IISc) பெங்களூரு பாரதத்தில் முதலிடத்தில் உள்ளது. உலக அளவில் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக தரவரிசையில் 301 முதல் 350க்குள்ளான தனது நிலையை தக்க வைத்துக் கொண்டுள்ளது. 35 பாரதப் பல்கலைக் கழகங்கள், இப்பட்டியலில் முதல் ஆயிரம் இடங்களை பெற்றுள்ளன. ஐ.ஐ.டி ரோபார் பாரத அளவில் இரண்டாமிடத்தில் தொடர்கிறது, ஜே.எஸஎஸ் உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி அகாடமி இப்பட்டியலில் புதிதாக அறிமுகமாகி உள்ளது. ஐ.ஐ.டி இந்தூர் நான்காவது இடத்தில் உள்ளது. டெல்லி, பம்பாய், கரக்பூர், மெட்ராஸ் உள்ளிட்ட ஐ.ஐ.டி கல்வி நிறுவனங்கள், இத்தரவரிசையில் முரண்பாடு, வெளிப்படைத்தன்மை இன்மை காரணமாக பங்கேற்காது என்ற அறிவிப்பால் பட்டியலில் இடம்பெறவில்லை என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

# சி.பி.ஐ. வழக்குப் பதிவு




விஜயபாரதம்

மேற்கு வங்கத்தில் தேர்தலுக்கு பிறகு நடைபெற்ற வன்முறை, கொலைகள், கற்பழிப்பு, சூறையாடல் உள்ளிட்ட குற்றங்கள் சம்பந்தமாக தேசிய மனித உரிமைகள் ஆணையம் (என்.ஹெச்.ஆர்.சி) குழு அறிக்கையை சமர்ப்பித்தது. அதனைத் தொடர்ந்து கொல்கத்தா உயர் நீதிமன்றம் பிறப்பித்த ஆணையின்படி சி.பி.ஐ விசாரித்து வருகிறது. இந்த விசாரணையில் இதுவரை 31 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.



விஜயபாரதம்

# தடுப்பூசி டி.சி.ஜி.ஐ ஒப்புதல்

ஹைதராபாத்தை தளமாகக் கொண்டு செயல்படும் பயலாஜிக்கல் – இ நிறுவனம் தயாரித்த குழந்தைகளுக்கான கொரோனா தடுப்பூசியின் இரண்டாவது கட்ட, மூன்றாவது கட்ட மருத்துவ பரிசோதனைகளை நடத்துவதற்கு சில நிபந்தனைகளுடன் இந்திய மருந்து கட்டுப்பாட்டு அமைப்பு ஒப்புதல் அளித்துள்ளது. நாடு முழுவதும் பத்து இடங்களில், 5 முதல் 18 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இச்சோதனை நடத்தப்படும். 30 கோடி தடுப்பூசிகளை பெற பயலாஜிக்கல் – இ நிறுவனத்திற்கு மத்திய அரசு ஏற்கனவே ரூ. 1,500 கோடியை முன்பணமாக செலுத்தியுள்ளது.

இதற்கிடையில், பாரத் பயோடெக்கின் கோவக்ஸின் கொரோனா தடுப்பூசியின் 2, 3 ஆம் கட்ட குழந்தைகளுக்கான சோதனைகள் நடைபெற்று வருகின்றன. அதன் முடிவு செப்டம்பரில் எதிர்பார்க்கப்படுகிறது. ஜைடஸ் காடிலாவின் ஊசி இல்லாத கொரோனா தடுப்பு மருந்து ZyCoVD ஏற்கனவே 12 முதல் 18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு போடுவதற்கு அவசர பயன்பாட்டு அங்கீகாரத்தை (EUA) பெற்றுள்ளது. இது அக்டோபர் முதல் வாரத்திலிருந்து நிர்வகிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# அகாரா பரிஷத் கோரிக்கை



விஜயபாரதம்

அகில பாரதிய அகார பரிஷத் (ஏ.பி.ஏ.பி) தலைவர் மஹந்த் நரேந்திர கிரி, 'நாட்டில் மதம் மற்றும் சமூக கட்டமைப்பு சமநிலையை பராமரிப்பதற்காக மக்கள்தொகை கட்டுப்பாட்டு மசோதாவை அறிமுகப்படுத்த வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார். இந்த மசோதா விரைவில் சட்டமாக்கப்பட வேண்டும். இச்சட்டம் அனைத்து மாநிலங்களையும் கட்டுப்படுத்தும் வகையில் இருக்க வேண்டும்' என்று கேட்டுக்கொண்டுள்ளார். தலிபான்களுக்கு ஆதரவாக சிலர் பேசுவது குறித்து அவர் பேசுகையில், 'தலிபான்களுக்கு ஆதரவளிப்பவர்கள் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். தலிபான்களுக்கு ஆதரவளிக்கும் தங்கள் சமூக மக்கள் மீது முஸ்லிம் மதத் தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். மகாபாரதத்தின்படி ஆப்கானிஸ்தானில் உள்ள கந்தஹார் அக்காலத்தில் ஹிந்து மன்னர்களால் ஆளப்பட்டது. இன்று அங்குள்ள ஹிந்துக்களும் சீக்கியர்களும் ஆப்கனைவிட்டு பயந்து வெளியேறுகின்றனர். வருங்காலத்தில் பாரதத்தில் என்ன நடக்கும் என்பதற்கு இது ஒரு அப்பட்டமான உதாரணம்' என தெரிவித்தார்.

# போதை மருந்து தயாரித்த காவலர்

மணிப்பூர் போதைப்பொருள் தடுப்புப்பிரிவு காவல்துறையின் சமீபத்தில் முஜிபுர் ரஹ்மான் என்ற தலைமைக் காவலரை போதைப் பொருட்களுடன் கைது செய்தனர். அவரது இல்லத்தில் நடைபெற்ற சோதனையில், 430 கிலோ அபின், 40 கிலோ பிரவுன் சுகர் உள்ளிட்ட சுமார் ரூ. 90 கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப்பொருட்களை பறிமுதல் செய்தனர். இந்த போதை மருந்துகளை அவர்கள் தங்கள் வீட்டில் அமைத்த தொழிற்சாலையில் உற்பத்தி செய்துள்ளனர் என கண்டறியப்பட்டது இது சம்பந்தமாக முஜிபுர் ரஹ்மானின் மகன் ஃபசல் கான், வினியோகஸ்தர் மற்றும் யைரோபோக் துலிஹால்,முகமது ஃபிரோஜ் அகியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.



விஜயபாரதம்

# பசுவை தேசிய விலங்காக்க வேண்டும்

உ.பி. அரசின் பசுவதைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட ஜாவித், தனக்கு ஜாமீன் வழங்கக் கோரி அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். அம்மனுவை விசாரித்த நீதிபதி சேகர் யாதவ் அமர்வு, 'பாரதத்தின் வேதங்கள், புராணங்கள், இதிகாசங்களில் பசு மிகவும் முக்கியமானது. பாரதக் கலாச்சாரத்தில் பசு ஒருங்கிணைந்த பகுதி. இன்றுள்ள சூழல்களில் பசுவை தேசிய விலங்காக மத்திய அரசு அறிவிக்க வேண்டும். பசுப் பாதுகாப்பு என்பதை ஹிந்து சமூகத்தின் அடிப்படை உரிமைகளின் ஒரு பகுதியாக்க வேண்டும். நாட்டின் கலாச்சாரம், நம்பிக்கைகள் பலவீனமடைந்தால் தேசம் பலவீனமடையும். எனவே, மத்திய அரசு நாடாளுமன்றத்தில் பசுவுக்கு அடிப்படை உரிமைகள் வழங்கும் மசோதாவைக் கொண்டுவர வேண்டும், பசுவை கொடுமை செய்வோரை கடுமையாக தண்டிக்கும் பிரிவுகள் சேர்க்கப்பட வேண்டும். வாழும் உரிமை என்பது கொல்வதற்கான உரிமையைவிட மேலானது. மாட்டிறைச்சி உண்பது அடிப்படை உரிமை அல்ல. பசுக்களை பாதுகாப்பது குறித்துப் பேசியவர்கள் இன்று அதன் எதிரிகளாக மாறியுள்ளனர். வரலாற்றில் முஸ்லிம் ஆட்சியாளர்களும் பாரத கலாச்சாரத்தில் பசுவின் பங்கை உணர்ந்திருந்தனர். பசுவதையைத் தடை செய்தனர்.' என குறிப்பிட்டனர்.

விஜயபாரதம்





விஜயபாரதம்

# அமித் ஷா நம்பிக்கை

ஜம்மு காஷ்மீரின் தொழில் வளர்ச்சிக்காக புதிய இணையதளத்தை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தொடங்கி வைத்தார். அப்போது அவர், 'சுற்றுலா, கல்வி, தகவல் தொழில்நுட்பத் துறையில் புதிய தொழில் தொடங்க ஊக்க சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. இதனால் உள்ளூரில் வேலை வாய்ப்பு அதிகரிக்கும். ஜம்மு காஷ்மீரில் தொழில் வாய்ப்புக்கான புதிய அத்தியாயம் தொடங்கப்பட்டுள்ளது. நாட்டிலேயே அதிகமான சாதக அம்சங்களைக் கொண்ட தொழில் கொள்கை தற்போது ஜம்மு காஷ்மீரில் மட்டுமே உள்ளது. பல்வேறு தொழில் நடவடிக்கைகள் மூலம் இம்மாநிலத்துக்கு ரூ.50 ஆயிரம் கோடி முதலீடுகள் வந்து சேரும்' என்று அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# லடாக்கில் புதிய சாலை



விஜயபாரதம்

லடாக் எல்லைப்பகுதியில், ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த பாங்கோங் ஏரியை ஒட்டி 18,600 அடி உயரத்தில் புதிய சாலை போடப்பட்டுள்ளது. கேலா பாஸை கடந்து லோல்காக்ரி கியாம்ட்சோ ஏரி, தருக் கிராமம், லே பகுதியை இணைக்கும். இந்த புதிய சாலையை பா.ஜ.கவின் லடாக் தொகுதி எம்.பி ஜம்யாங் ட்ஸெரிங் நாம்யால் திறந்துவைத்தார். இந்த சாலை பாரத ராணுவத்தின் 58 பொறியாளர் படைப்பிரிவினரால் இரண்டே மாதங்களில் உருவாக்கப்பட்டது. ஜிங்க்ரால் முதல் டாங்ட்சே வரையிலான 41 கி.மீ பயண தூரத்தை இது குறைக்கும். இச்சாலை, ராணுவ பயன்பாட்டிற்கு மட்டுமல்ல, இது அந்த பிராந்திய மக்களின் பொருளாதார நிலையை உயர்த்தும். பனி சறுக்கு உள்ளிட்டவற்றிற்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கு வசதியாக இருக்கும். அப்பகுதிகளில் வாழும் நாடோடி கால்நடை பராமரிப்பாளர்களின் வாழ்க்கை தரம் இதனால் உயரும் என ராணுவம் தெரிவித்துள்ளது.



விஜயபாரதம்

# ஜபாட் 2021 போர் பயிற்சி

ரஷ்யாவில் இன்று முதல் செப்டம்பர் 16 வரை ஜபாட் 2021 என்ற பன்நாட்டு ராணுவப் பயிற்சி நடைபெறுகிறது. இதில் பாரதம், ரஷ்யா, மங்கோலியா, ஆர்மீனியா, கஜகஸ்தான், தஜிகிஸ்தான், கிர்கிஸ்தான், செர்பியா, பெலாரஸ் நாடுகள் பயிற்சியில் பங்கேற்கின்றன. பாகிஸ்தான், சீனா, வியட்நாம், மலேசியா, வங்காளதேசம், மியான்மர், உஸ்பெகிஸ்தான், இலங்கை உள்ளிட்ட நாடுகள் பார்வையாளர்களாக பங்கேற்கின்றன. இதில் பாரதத்தின் சார்பில் நாகா பட்டாலியனை சேர்ந்த 200 பேர் கொண்ட ராணுவக் குழு பங்கேற்கிறது. நாடுகளிடையே பரஸ்பர ராணுவம் மற்றும் தொழில் நுட்ப உறவுகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்த போர் பயிற்சி நடத்தப்படுகிறது.

# டிரோன் எதிர்ப்பு அமைப்பு



விஜயபாரதம்

மத்திய அரசுக்கு சொந்தமான பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் (பி.இ.எல்) நிறுவனத்துடன் நமது கடற்படைக்கென விஷேஷ டிரோன் எதிர்ப்பு அமைப்புகளை (NADS) உருவாக்க கடற்படை ஒப்பந்தம் ஒன்றை போட்டுள்ளது. அதன்படி, பி.இ.எல் லேசர் உதவியுடன் டிரோன்களை கண்டறிந்து லேசரால் அதனை எரித்து அழித்தல், அல்லது அதனை ஜாம் செய்து செயலற்றதாக ஆக்குதல் போன்ற இருவேறு திறனுடன் கருவிகளை உருவாக்கும். மேக் இன் இந்தியா மற்றும் ஆத்ம நிர்பார் திட்டத்தின் கீழ், முற்றிலும் உள்நாட்டுத் தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்பட உள்ளது. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (டி.ஆர்.டி.ஓ) இதற்கான தொழில் நுட்ப உதவிகளை அளிக்கிறது. விரைவில் ராணுவமும் விமானப்படையும் கூட பி.இ.எல் நிறுவனத்துடன் டிரோன் தயாரிப்பு ஒப்பந்தங்களை இறுதி செய்ய உள்ளன. இந்த டிரோன் பாதுகாப்பு அமைப்பு டி.ஆர்.டி.ஓவால் உருவாக்கப்பட்டு வெற்றிகரமாக ஏற்கனவே சோதிக்கப்பட்டுள்ளது. இது 2020 குடியரசு தினம், முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் வருகை, சுதந்திர தினம் 2020, குடியரசு தினம் 2021 மற்றும் சுதந்திர தினம் 2021 உள்ளிட்ட பாதுகாப்புப் பணிகளின்போது பயன்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# பயங்கரவாத பட்டியலில் தலிபான் நீக்கமா?



விஜயபாரதம்

ஆப்கானிஸ்தானை கைப்பற்றிய உள்ள தலிபான்கள்கடந்த முறை போல கொடுங்கோல் ஆட்சி நடத்த மாட்டோம் என்று தங்களுடைய 'இமேஜை' மாற்ற முயற்சித்து வருகின்றனர். தலிபான்கள் பத்திரிக்கை சந்திப்புகள் நடத்துகின்றனர், பத்திரிகையாளரின் கொடூர கொலைக்கு மன்னிப்பு கேட்டனர் என அவர்களுக்கு ஆதரவாக பல ஊடகங்களும் செயல்படுகின்றன. 1999ல் பின்லேடனுக்கு புகலிடம் அளித்தபோது தலிபான் அமைப்பினை பயங்கரவாத அமைப்பாக அறிவித்த ஐ.நா அதன் மீது பொருளாதார தடையும் விதித்தது. தற்போதும், ஐ.நா பாதுகாப்பு சபை, தலிபான்களை பயங்கரவாத பட்டியலில் இருந்து நீக்கி விட்டதாக செய்திகள் பரவி வருகின்றன. இது குறித்து விளக்கம் அளித்துள்ள ஐ.நா சபை, தலிபான் அமைப்பு பயங்கரவாத பட்டியலில் இருந்து நீக்கப்படவில்லை, ஐ.நா பாதுகாப்பு சபையின் தடைப்பட்டியலில் பல தலிபான் தலைவர்களின் பெயர்கள் இன்னமும் உள்ளது. தலிபான்களை குறிப்பிடும் வாக்கியங்கள் மட்டுமே பத்திரிக்கை செய்தி குறிப்பில் இருந்து அகற்றப்பட்டு உள்ளன' என தெரிவித்துள்ளது.

# வானளாவிய கட்டடங்கள் தினம்



விஜயபாரதம்

வழக்கமாக, 152 மீட்டர்களுக்கும் அதிகமான உயரம் உள்ள மனிதர்கள் வாழும் கட்டடங்கள், வானளாவிகள் அல்லது வானளாவிய கட்டடங்கள் (ஸ்கை ஸ்கிராப்பர்ஸ்) எனப்படுகின்றன. 19ம் நூற்றாண்டுவரை ஆறு மாடிகளுக்கு மேல் உயரம் கொண்ட கட்டிடங்களைக் காண்பது அரிது. எஃகு கட்டமைப்பைக் கொண்ட முதல் வானளாவிய வணிகக் கட்டிடங்கள் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உருவாக ஆரம்பித்தன. முதல் வானளாவிய கட்டடமாக சிகாகோவில் உள்ள வீட்டுக் காப்பீட்டுக் கட்டடமாகக் கருதப்படுகிறது. இருப்பினும் இது 10 தளங்களையேக் கொண்டிருந்தது.


அக்காலத்தில் எல்.ஐ.சி கட்டடத்தையே ஆச்சரியமாக பார்த்தவர்கள் நாம். அன்றைய திரைப்படங்களில் எல்.ஐ.சி கட்டடமும் சென்ட்ரல் ரயில் நிலையமும்தான் சென்னையின் அடையாளம். லிப்ட் வசதிகள் இல்லாத அக்காலத்தில் மனிதர்கள் தினமும் ஆறு மாடிகளுக்கு மேல் ஏறி இறங்குவது சாத்தியமில்லை, 15 மீட்டர்களுக்கு மேல் நீர் வழங்குவதும் இயலாது என்பதால் அதற்குமேல் கட்டடங்களை காண முடியாது. நமது வானளாவிய கோயில் கோபுரங்களை இதில் கணக்கு சேர்க்காதீர்கள்.

உருக்கு இரும்பு, வலுவூட்டிய காங்கிரீட், நீரேற்றிகள், லிப்ட் போன்ற தொழில்நுட்பங்கள், பொறியியல், கட்டடக்கலை வளர்ச்சி போன்றவற்றால் இன்று மிகவும் உயரமான கட்டடங்களை அனாயாசமாகக் கட்ட முடிகிறது.

வானளாவிய கட்ட்டங்களின் பாரம் தாங்கும் கூறுகள் ஏனைய கட்டிடங்களில் இருந்து வேறுபடுகின்றன. 4 மாடிகள் வரையிலான கட்டடங்களின் அவற்றின் சுவர்களே பாரத்தைத் தாங்கிக்கொள்ளும். ஸ்கை ஸிக்ராப்பர்ஸ் மிக உயரமானவை என்பதால் இவற்றின் பாரம், எலும்புக்கூடுகள் போன்ற உறுதியான சட்டக அமைப்புக்களால் தாங்கப்படுகின்றன. அதிகமான காற்று விசையைத் தாங்குவதற்காக, 40 மாடிகளுக்கும் அதிகமான உயரம் கொண்ட கட்டடங்கள் சிறப்புக் கவனத்துடன் வடிவமைக்கப்படுகின்றன.

உலகில் முதல் பத்து வானளாவிய கட்டடங்களில் முதலாவதாக ஐக்கிய அரபு அமீரகரத்தில் உள்ள புர்ஜ் கலிபா (828 மீ) உள்ளது. அடுத்ததாக, ஷாங்காய் கோபுரம் (632 மீ), அப்ரஜ் அல் பைட் கடிகார கோபுரம் (601 மீ), பிங்க் நிதி மையம் (599 மீ), லோட்டே உலக கோபுரம் (554.5 மீ), உலக வர்த்தக மையம் (541.3), குவாங்சோ சி.டி.எப் நிதி மையம் (530 மீ), தியாஞ்சின் சி.டி.எப் நிதி மையம் (530 மீ), சீனாசூன் (528 மீ), தைபே (508 மீ).


ஏன் இந்த ஹிந்து எதிர்ப்பு?
பொது இடங்களில் அரசு மதுபானம் வைக்கலாம்... ஆனால் விநாயகர் வைக்க கூடாதா....
Tasmac
தமிழக அரசு


* me
இன்னைக்கு வீட்டம்மா யூ டியூப் பார்த்து ஒரு சமையல் ஐட்டம் செஞ்சாங்க சாப்பிட்டு முடிச்சதும் அந்த வீடியோவை பார்த்தேன் சுமார் 13 ஆயிரம் பேர் அதை பார்த்துருக்காங்க
நீதி: துன்பங்கள் நமக்கு மட்டுமே வருவதில்லை